முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திருமதி.வெ. விஜயலெட்சுமி, பி.ஏ., எல்.எல்.எம்., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, வள்ளியூர்

2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் புதன் கிழமை

<u>அசல் வழக்கு எண். 16/2021</u>

மரியம்மாள் ..... வாதி

// எதிர் //

மைக்கிள் சோபியா ..... பிரதிவாதி

இவ்வழக்கானது 21.11.2022 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுபாஷ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் போதுமான அவகாசம் வழங்கப்பட்டும் நாளிதழில் விளம்பரம் கொடுக்கப்பட்டும், பிரதிவாதி ஆஜராகாததால் 12.04.2022 அன்று அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை, வாதி தரப்பு சாட்சியம், சான்றாவணம் மற்றும் வாதி தரப்பு வாத உரை ஆகியவைகளை பரிசீலனை செய்து இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது, வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1ன் கீழ் வழக்கு தபசில் சொத்தில் உள்ள வாதியின்

அமைதியான அனுபவத்தை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ, முகவர்களோ, எவ்வித இடையூறும் செய்யக் கூடாதென ஓர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடுமாறும், வழக்கு தபசில் சொத்தை பொறுத்து பிரதிவாதி போலியாக புனைந்துள்ள 15.10.2013ம் தேதியிட்ட வள்ளியூர் சார்பதிவு அலுவலக செட்டில்மெண்ட் ஆவண எண். 3415/2013 சட்டப்படி செல்லத்தக்கதல்ல (NULL – VOID) என விளம்புகை செய்து உத்தரவிடுமாறும் செலவு தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1). வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:

இவ்வழக்கானது, வழக்கு தபசில் சொத்தானது தெற்கு கள்ளிகுளம் கிராமம், நத்தம் புல எண். 4490/5 ல் 0.01.0க்கு சமமான 2.50 சென்ட் 1089 சதுர அடி மனையும், அதிலுள்ள வடக்கே பார்த்த கதவு எண்.52/10 கொண்ட கட்டிடமாகும். பிரதிவாதி தற்போது வாதியுடன் வசித்து வருவதாகவும், வாதி பிரதிவாதி இருவரும் குருதி வழி உறவினர்கள். வாதியின் தாய்மாமாவின் மகளின் மகள் ஆவார். ஆதியில் வழக்கு தபசில் சொத்தும் வேறு சில சொத்துக்களும் அந்தோணி நாடார் மகள் தேவாயி என்பவருக்கு வள்ளியூர் சார்பதிவக ஆவண எண். 128/1971 ன் படி 30.09.1971 கிரையம் மூலம் பாத்தியப்பட்ட மனையில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றும் ஆசிரியையாக பணி புரிந்து ஓய்வு பெற்று விட்டார் என்றும் தேவாயி அம்மாளுக்கு ராயப்பன் தஸ்நேவிஸ்மரியான் என்ற 2 சகோதரர்களும், சந்தனம்மாள் என்ற சகோதரியும் இருந்தனர் என்றும் ராயப்பன் என்பவருக்கு

சிலுவை ரெத்தினம் என்ற பெண் வாரிசும் அவருக்கு திருமணமாகி பிரதிவாதி சோபியா என்பவரும், தேவாயி அம்மாளின் மற்றொரு சகோதரர் தஸ்நேவிஸ் மரியான் என்பவருக்கு வேளாங்கண்ணி, அஜந்தா, ஜேசு சந்திரகுமார், மேரி வின்ஸ் பாப்பா ஆகிய 4 பிள்ளைகளும், சந்தனம்மாளுக்கு ராஜேந்திரன், சுசீலா, வாதியான மரியம்மாள் ஆகிய பிள்ளைகளும், தேவாயி அம்மாள் திருமணம் செய்து கொள்ளாததால் அவருக்கு நேரடி வாரிசுகள் இல்லை என்றும், தேவாயி அம்மாள் வாதி மரியம்மாள் மீது மிகுந்த பாசத்துடனும், அக்கறையுடனும் இருந்து வந்ததாகவும், தேவாயி அம்மாள் தன்னுடைய சொத்துக்களை தனது காலத்திற்கு பின்னர் மரியம்மாளுக்கு தான் சேர வேண்டும் என குருதி வழி உறவினர்களிடம் கூறி வந்ததாகவும், தனது அரசு ஆசிரிய பதிவேட்டிலும், ஓய்வூதிய பதிவேட்டிலும் நாமினியாக வாதி மரியம்மாளின் பெயரை சுட்டிக்காட்டி பதிவிட்டுள்ளார். வாதி திருமணமாகி சிவகாசிக்கு சென்று வசித்து வந்து அவ்வப்போது தேவாயி அம்மாளை சந்தித்து அவருக்கு வேண்டிய உதவிகளை செய்து வந்துள்ளார் என்றும் தேவாயி அம்மாளின் குருதி வழி உறவினர்கள் சில பேர் வாதி மரியம்மாள் தேவாயி அம்மாளின் சொத்துக்களை அபகரிக்க வேண்டி அக்கரை செய்ததாக புறம் பேசியதை வாதி பொருட்படுத்தாமல் தேவாயி அம்மாளுக்கு இறுதி காலத்தில் சேவை செய்து வந்தார் என்றும் தேவாயி அம்மாளுக்கு 80 வயதாகி விட்டதால் குடியிருப்பு வீட்டையும் விவசாய சொத்துக்களையும் தகுதி வாய்ந்த சாட்சிகள் முன்னிலையில் 13.07.2010 அன்று உயில் சாசனம் எழுதி அதன் அசலையும் வாதியிடம் ஒப்படைத்து

16.08.2013 அன்று காலமாகி விட்டார். 13.07.2010 அன்று தேவாயி அம்மாள் வாதி பெயருக்கு எழுதி வைத்த பதிவுறாத உயில் சாசனமானது 16.08.2013 தேவாயி அம்மாள் இறந்த உடன் அமலுக்கு வந்து வாதி தபசில் சொத்தின் முழு உரிமையாளர் ஆவார் என்றும் பிரதிவாதி மைக்கிள் சோபியா வாதியுடன் வசித்து வந்து தனது தாயார் சிலுவை ரத்தினம் என்பவருடன் சேர்ந்து தபசில் வீட்டை அபகரிக்க ஒரு போலியான வள்ளியூர் சார்பதிவக செட்டில் மெண்ட் ஆவண எண். 3415/2013 ஐ 15.10.2013 பதிவு செய்துள்ளார் என்றும் கடந்த 20.01.2021 அன்று பிரதிவாதி வாதியிடம் மேற்படி ஆவணத்தை காட்டி தபசில் சொத்திலிருந்து காலி செய்து வெளியேறுமாறு கூறியதை வாதி மறுத்து விட்டார். வாதியின் உரிமை மற்றும் அனுபவத்தை மீறி தபசில் வீட்டிலிருந்து வாதியை வெளியேற்ற முயற்சிப்பது சட்ட விரோதமானதாகும் எனவே, பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யக் கூடாதென உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், பிரதிவாதி போலியாக புனைந்துள்ள வள்ளியூர் சார்பதிவக ஆவண எண்.3415/2013 செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). இவ்வழக்கில் பிரதிவாதிக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும் நாளிதழில் விளம்பரம் கொடுக்கப்பட்டும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாததால் இந்நீதிமன்றத்தால் 12.04.2022 அன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

3). வாதி தரப்பில் வாதி வா.சா.1 முதல் வா.சா.4 வரையான சாட்சிகள்

விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4). வா.சா.1 ஆன வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளித்தும் 30.09.1971 ம் தேதிய கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆகவும், தேவாயி அம்மாள் பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.2 ஆகவும், தேவாயி அம்மாள் பெயரில் உள்ள வீட்டு தீர்வை, வா.சா.ஆ.3 ஆகவும், 15.10.2013 ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.4 ஆகவும், தேவாயி அம்மாளின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.5 ஆகவும், தமிழக அரசின் ஓய்வூதிய Annexure–II நாமினி ரிப்போர்ட் வா.சா.ஆ.6 ஆகவும், 13.07.2010 ம் தேதிய பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் வா.சா.ஆ.7 ஆகிய ஆவணங்கள் வாயிலாக தெரிய வருகிறது.

5)<u>. தீர்வுக்குரிய பிரச்சினை:</u>

வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

6). வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் வா.சா.ஆ.1 ஆன 30.09.1971 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் படி தபசில் சொத்தானது தேவாயி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும் வா.சா.ஆ.2 மனைவரி தோராய பட்டா தேவாயி அம்மாள் பெயரிலேயே இராதாபுரம் வட்டாட்சியர் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் வழக்கு சொத்தில் தேவாயி அம்மாள் வசித்ததற்கான வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.3 என்றும் வா.சா.ஆ.7 வாயிலாக தபசில் சொத்தினை பொறுத்து 13.07.2010 ல் தேவாயி அம்மாள் இவ்வழக்கின் வாதிக்கு எழுதிக் கொடுத்த உயில் ஆவணம் என்றும் உயில் ஆவணத்தின் அடிப்படையில் தபசில் சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டு

வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும் எனவே வாதி அவரது வழக்கினை நிரூபித்துள்ளார் என்று வாதம் செய்து ***"மேற்படி வாதத்திற்கு ஆதரவாக 2022 (2) MWN (Civil) 701, WP(Civil) 137 of 1997 and WP(Civil) 674 of 1998 டி போன்ற முன் தீர்ப்புக்களை தாக்கல் செய்தார்."***

*7).* வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்வையிட்ட போது தேவாய் அம்மாள் தபசில் சொத்தினை கிரையம் பெற்ற விவரம் தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பார்வையிடும் போது தேவாய் அம்மாள் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவில் புல எண். 499.5 ல் பரப்பளவு 0.01.0 உள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்தை பொறுத்து வா.சா.ஆ.7 ஆன உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ல் சொல்லப்பட்டுள்ள சொத்தின் பரப்பளவை பொறுத்து வா.சா.ஆ.7 ஆன உயில் ஆவணத்தில் ஏற்பட்டது என்றும் அதன் படி வாதிக்கு தபசில் சொத்தில் உரிமை ஏற்பட்டு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4 ஆனது இவ்வழக்கின் பிரதிவாதிக்கு ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணமானது போலியானது என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டிருந்தாலும் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் வாதியின் வழக்கினை மறுத்து எதிர் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரிய வருகிறது. வாதிக்கு தபசில் சொத்தானது பாத்தியப்பட்டது என்பதை வா.சா.ஆ.7 ஆன உயில் ஆவணத்தை தாக்கல் செய்துள்ள நிலையில் வாதியின் சாட்சியத்தை எளிதாக புறந்தள்ளி விட முடியாது.

8). வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ஆன உயில் ஆவணத்தில் உள்ள சாட்சிகளான விஜி, அன்பு ஆகியோரை வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆக இந்நீதிமன்றத்தில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

***" It is well settled that will has to be proved in the manner known to law as contemplated under section 68 of the Indian Evidence Act, by examining at least one of the attesting witnesses to prove the will".***

என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 68 ன் படி வா.சா.ஆ.7 ல் உள்ள சாட்சிகளை இந்நீதிமன்றத்தில் வா.சா.2, வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட நிலையில் உயில் ஆனது இவ்வழக்கின் வாதிக்க எழுதிக் கொடுத்துள்ளது உறுதி செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.7 ஆன உயில் ஆவணமானது தேவாய் அம்மாள் காலமான பிறகு நடைமுறைக்கு வந்ததாக இந்நீதிமன்றத்திற்கு தெரிய வந்தது. மேற்படி வா.சா.1 முதல் வா.சா.4 வரையான சாட்சியங்களில் இருந்து வழக்குரை சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை வாதி நிரூபித்துள்ளார் என்பதை நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி விவாதங்களின் அடிப்படையிலும் வா.சா.ஆ.1 முதல் 3, 5 முதல் 7 வரையான ஆவணங்களின் படியும் மற்றும் முரண்பாடற்ற வா.சா.1 முதல் வா.சா.4 வரையான சாட்சியத்தின் மூலமும் வாதி தனது வழக்கை நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

9). இறுதியாக:

*அ). வழக்கு தபசில் சொத்தில் உள்ள வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ, முகவர்களோ, எவ்வித இடையூறும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும்*

*ஆ) வழக்கு தபசில் சொத்தை பொறுத்து பிரதிவாதி போலியாக புனைந்துள்ள 15.10.2013 ம் தேதியிட்ட வள்ளியூர் சார்பதிவு அலுவலக செட்டில்மெண்ட் ஆவண எண். 3415/2013 சட்டப்படி செல்லத்தக்கதல்ல (NULL – VOID) என விளம்புகை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக் கூடியது என இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.*

*இ). செலவு தொகை இல்லை.*

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7 ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

வாதி தரப்பு சாட்சி :

வா.சா.1 திருமதி. மரியம்மாள்

வா.சா.2 திருமதி . விஜி

வா.சா.3 திரு. அன்பு

வா.சா.4 திருமதி. பாத்திமா

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :

| வ. எண். | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| 1 | 30.09.1971 | கிரைய ஆவணம் | அசல் |
| 2 | 31.12.2013 | தேவாய் அம்மா பெயரில் உள்ள பட்டா | அசல் |
| 3 | -- | வீட்டு வரி ரசீது | நகல் |
| 4 | 15.10.2013 | செட்டில்மெண்ட் ஆவணம் | சார்பதிவக நகல் |
| 5 | 16.08.2013 | தேவாய் அம்மாளின் இறப்பு சான்றிதழ் | -- |
| 6 | -- | ஓய்வூதிய Annexure-II நாமினி ரிப்போர்ட் | -- |
| 7 | 13.07.2010 | பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் | அசல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u> : இல்லை

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> : இல்லை

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.